03.10.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 107/2018</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | | |
| த/பெ | வீரப்பன் | | |
| கிராமம் | மரகதபுரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம். | வயது | 67/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஏற்கனவே கூட்டுறவு வங்கியில் பணி புரிந்து ஓய்வு பெற்று விட்டேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் சிலரை எனக்கு தெரியும். வழக்கில் இறந்துபோன முருகன் எனது மைத்துனர் ஆவார். வழக்கு சம்மந்தமாக எனது மைத்துனர் மனைவி வீரம்மாள் புகார் கொடுத்தார். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு என் மைத்துனர் இறந்துவிட்டதாக கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது வீட்டின் திண்ணையில் பிணமாக கிடந்தார். அதன் பிறகு நான் மருத்துவமனைக்கு போகவில்லை. அவரை கொலை செய்து விட்டதாக கேள்விப்பட்டேன். விரோதத்தை வைத்து பழைய ஆட்கள் செய்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 29.08.2014ம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் என் மைத்துனர் முருகன் கொலை சம்மந்தமாக முருகன் மனைவி வீரம்மாள் அன்று என்னிடம் சொன்ன தகவலை அன்றைய தினம் சம்பவம் குறித்து விசாரணை செய்த விழுப்புரம் தாலுக்கா

காவல் ஆய்வாளர் அவர்களிடம் நான் கேள்விபட்டதை வாக்குமூலமாக சாட்சியம் அளித்தேன் என்றும், 16.09.2014ம் தேதி முருகன் மூத்த மைத்துனர் சீனுவாசன் என்பவர் முருகன் கொலை சம்மந்தமாக நேரில் பார்த்த உண்மைகளை எங்களிடம் சொன்னார் என்றும், சம்பவம் அன்று அதிகாலை சீனுவாசன் அவரது வீட்டிலிருந்து கொல்லைக்கு தண்ணீர் பாய்ச்ச செல்லும் போது எங்கள் ஊரைச் சேர்ந்த விஸ்வநாதன் மகன் ராதாகிருஷ்ணன், உலகநாதன் மகன் வீரபத்திரன், ராஜேந்திரன் மகன் ரகு, குணசேகரன் மகன்கன் சத்தியசீலன், பிரதாப், குப்பன் மகன்கன் அன்பரசன், புகழேந்தி, தண்டபாணி மகன் அசோக்குமர், கணேசன் மகன் சிலம்பரகன், கோபாலகிருஷ்ணன் மகன் சிவக்குமார் மற்றும் விநாயகமூாத்தி ஆகியோர்கள் கும்பலாக தடி கத்தி போன்ற ஆயுதங்களுடன் முருகன் வீட்டிற்கு சென்றதை பார்த்தாக சொன்னார் என்றும், அதிகாலை 3.30 மணியளவில் முருகன் அவரது வீட்டின் திண்ணையில் படுத்திருந்ததை பார்த்த அவர்கள் முருகனை சூழ்ந்துகொண்டு அன்பரசன் முருகனின் தலையையும், சத்தியசீலன், புகழேந்தி கால்களையும், கோபாலகிருஷ்ணன் கைகளையும் அழுத்தி பிடித்துக்கொண்டார்கள் என்றும், பிரதாப், சிலம்பரசன், அசோக்குமார், கத்தியுடன் சிவக்குமார், வினாயகமூர்த்தி தடியுடன் நின்றும் அவனை விடாதிங்கடா வெட்டி கொல்லுங்கடா என்று தூண்டிவிட ராதாகிருஷ்ணன், ரகு, ஆகிய மூவரும் சேர்ந்து எங்களுக்கு எதிராக சாட்சி சொல்ல போறியா நீ உயிருடன் இருந்தால்தான் சாட்சி சொல்வாய் ஒழிந்துபோடா என்று சொல்லி மூவரும் கையில் வைத்திருந்த கத்தியால் கழுத்து பகுதியில் வெட்டி கொலை செய்துவிட்டு எதிரிகள் அனைவரும் ஆயுதங்களுடன் தப்பி ஓடிவிட்டார்கள் என்று மைத்துனர் சீனுவாசன் என்னிடம் சொன்னதை காவல் ஆய்வாளர் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**